பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 22 வெள்ளிக்கிழமை (07-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:12

# வாக்குகள் எண்ணும் நடவடிக்கை

# 9 மாவட்டங்களில் இடைநிறுத்தம்!

## இன்று தொடரும்

கொழும்பு,டிசெம்பர்7

**நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளை எண்ணும் பணி யாழ்ப்பாணம் உட்பட ஒன்பது மாவட்டங்களில் நேற்று மாலை இடைநிறுத்தப்பட்டது.**

வாக்குகளை எண்ணும் தேர்தல் உத்தியோகத்தர்களின் நலன் கருதியே அந்தப்பணி நேற்று மாலையுடன் இடைநிறுத்தப்பட்டு, இன்று காலைமுதல் மீண்டும் தொடரப்பட விருப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தெரிவித்தார்.

இந்தப் பணி ஒத்திவைக்கப்பட்டமை குறித்து பல்வேறு கதைகள் அடிபட்டபோதிலும், தேவையற்ற வீண சந்தேகங்களைக் கிளப்பவேண்டாம் என்று தேர்தல் ஆணையாளர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

(5ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கூட்டணி - 3 ஐ.தே.க. -2, புளொட் - 1

### சித்தார்த்தனும் எம்.பியாகிறார்

வவுனியா,டிசெ.7

வவுனியா மாவட்டத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணி மூன்று ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக ஐக்கிய தேசியக் கட்சி இரு ஆசனங்களையும் புளொட் ஓர் ஆசனத்தை யும் வென்றிருக்கின்றன.

தமிழ்க் கூட்டமைப்பின் வேட்பாளர்களான செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), இராஜா குகனேஸ்வரன் (ரெலோ) சிவசக்தி ஆனந்தன (சுரேஷ் அணி) ஆகிய மூவரும் வவுனியா மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

9 ஆயிரத்து 614 வாக்குகளைப் பெற்று புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் அக்கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

வவுனியா மாவட்ட தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில் வருமாறு:-

- ★ த.வி.கூட்டணி - 41,953 - 3
- ★ ஐ.தே.க. - 26,7[illegible] 2
- ★ புளொட் - 9,614 - 1
- ★ பொ.ஐ.மு. - 7,832 -
- ★ ஈ.பி.டி.பி. - 3,185 -
- ★ ஜே.வி.பி. - 682

(ஐ-164-10-6-4-9)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டமைப்பு பெருவெற்றி!

மட்டக்களப்பு,டிசெ.7

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெரு வெற்றியீட்டியிருக்கிறது.

அங்கு கூட்டணி 86 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று மூன்று ஆசனங்களைப் பெற்றிருக்கிறது.

தமிழர் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட கே.துங்கவடிவேல், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், பொன். செல்வராஜா ஆகியோர் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்று நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஓர் ஆசனமும் பொதுமக்கள் ஐக்கிய

(5ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறையில் முன்னணி!

### கூட்டணிக்கு அங்கு ஓர் இடம்

அம்பாறை,டிசெ.7

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புக்கு ஓர் இடம் கிடைத்திருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட அரியநாயகம் சந்திரநேரு நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

அம்பாறையில் சுமார் 75ஆயிரம் வாக்குளைப் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அங்கு மூன்று ஆசனங்களைக் கைப்பற்றும் நிலையில் உள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரிஸ், முன்னாள் பிரதி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா, எம்.ஐ.அன்

(5ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு-6;ஈ.பி.டி.பி.-2;ஐ.தே.க.-1 யாழ். மாவட்ட முடிவில் மாற்றம் வராது!

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதை தேர்தல் ஆணையாளர் தாமதித்துள்ள போதிலும்.

இங்கு தமிழர் கூட்டமைப்பின் சார்பில் ஆறு பேரும், ஈ.பி.டி.பி. சார்பில் இருவரும், ஐதேக. ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படும் நிலையில் எந்த மாற்றமும் இருக்காது என்று யாழ். தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தில் முக்கிய மூன்று கட்சிகள் பெற்ற வாக்குகளும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் விவரமும் வருமாறு:-

- ★ த.வி.கூ. - 102,304 - 06
- ★ ஈ.பி.டி.பி. - 57,208 - 02
- ★ ஐ.தே.க. - 16,245 - 01

ஏனைய கட்சிகள் எதுவும் ஐந்து. வீதத்துக்கு அதிக வாக்குகளைப் பெறாததால் அவற்றின் வாக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை முடிவு செய்யும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தேர்ந்தெடுக்கப்படும் ஆறு உறுப்பினர்கள் யார் என்ற விவரம் யாழ். தேர்தல் செயலகம் மீண்டும் இன்று காலை திறந்து இயங்கத் தொடங்கியதும் தெரியவரும்.

விருப்பு வாக்குகளில் முதல் மூன்று இடங்களையும் வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, ஜீ.ஜீ.பி.கஜேந்திரகுமார் ஆகியோர் பெற்றுள்ளனர். இவர்களில் முதல் இடம் யாருக்கு என்பது தெரியவில்லை.

நான்காம் ஐந்தாம் இடங்களில் என்.ரவிராஜ், அ.விநாயகமூர்த்தி ஆகியோர், உள்ளனர்.

ஆறாவது இடத்துக்கு சிவாஜிலிங்கம், சீ.வி.கே.சிவஞானம் ஆகியோர் போட்டியிடுகின்றனர். சுரேஷ் பிரேமச்சந்திரனும் நெருக்கமாக உள்ளார்.

ஐ.தே.கட்சி சார்பில் அதன் முதன்மை பேட்பாளர் தி.மகேஸ்வரன் தெரிவாகுகின்றார்.

ஈ.பி.டி.பி.சார்பில் தேர்தெடுக்கப்படும் இரு உறுப்பினர்கள் யார் என்பது இன்னமும் தெரியவரவில்லை.

(உ)

### குடாநாட்டில் அமைதி

யாழ்ப்பாணம்,டிசெ.7

தேர்தல் வாக்களிப்புக்கு முன்னரும் வாக்களிப்பின் போதும் பரவலாக வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுவந்த குடாநாட்டில் நேற்று முழுநாளும் அமைதி நிலவியது.

ஊரடங்கை அடுத்து மக்கள் முழுநாளும் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்க நேர்ந்தது. ஆங்காங்கே சில இடங்களில் மக்கள் நடமாட்டம் இருந்தபோதும் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன.

ஊரடங்கு தொடர்ந்து நேற்று முழுநாளும் நீடிக்கப்பட்டதால் மக்கள் அத்தியாவசியப் பொருள்களை வாங்கமுடியாத நிலை ஏற்பட்டது.

(ஐ-4-6-9-10)

## கூட்டமைப்பு சார்பில் 16 எம்.பிக்கள் தெரிவு!

கொழும்பு,டிசெ.7

பொதுத்தேர்தலில் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட 16 பேர் நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்படும் வாய்ப்பு கிட்டியிருக்கின்றது.

மாவட்ட ரீதியில் தெரிவுசெய்யப்பட்டுள்ள கூட்டமைப்பு எம்.பிக்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

- ★ யாழ்ப்பாணம் - 6
- ★ வவுனியா - 3
- ★ மட்டக்களப்பு - 3
- ★ திருகோணமலை - 1
- ★ அம்பாறை - 1

இது தவிர, இலங்கை முழுவதிலும் சுமார் மூன்றரை லட்சம் வாக்குகளைப் பெற்றிருப்பதால் தமிழர் கூட்டமைப்புக்கு தேசியப் பட்டியல் மூலம் இரண்டு எம்.பிக்களைத் தெரிவுசெய்ய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

யாழ்ப்பாணம் - ஒரு லட்சத்து இரண்டாயிரம், வவுனியா - 41 ஆயி

(5ஆம் பக்கம் பார்க்க)

## தனிப் பெரும் கட்சியாக ஐ.தே.க. வெற்றி நடை!

கொழும்பு,டிசெ.7

நேற்றுமாலை வாக்கு எண்ணும் பணிகள் இடைநிறுத்தப்படும் வரை அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகளின்படி எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பாலான இடங்களில் வெற்றியீட்டித் தொடர்ந்து வீறுநடை போட்டபடி இருந்தது.

ஆளும் கட்சியின் கோட்டைகளாகக கருதப்பட்டு வந்த மாவட்டங்களிலும் ஐ.தே.கட்சி பெரு வெற்றியீட்டியுள்ளது.

இதுவரையும் 10 தேர்தல் மாவட்டங்களின் பெறுபேறுகள் மாத்திரம் அறிவிக்கப்பட்டுள்ளன. 9 மாவட்டங்களின் முடிவுகள் உடனடியாக அறிவிக்க முடியாதுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வெற்றி, தோல்வி ஆகிய இரண்டையும் அமைதியாக ஏற்றுச் சமாதானமான முறையில் செயற்படுமாறு நாட்டு மக்கள் அனைவரையும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

ஐ.தே.கட்சி ஆகக் கூடுதலான தொகுதிகளில் வெற்றிபெற்று முன்னணியில் உள்ளது. பெறுபேறுகள் அறிவிக்கப்பட்ட 120 தொகுதிகளில் ஐ.தே.கட்சி 89 தொகுதிகளில் வெற்றிவாகை சூடியுள்ளது.

பொ.ஐ.முன்னணியின் கோட்டையாகக் கருதப்பட்டு வந்த வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் ஐ.தே.கட்சி பெரும் வெற்றியீட்டியுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்திலும் ஐ.தே. கட்சிக்கே கூடுதலான தொகுதிகள் கிடைத்துள்ளன.

கலவான, நிவித்திக்கலை, அது

(5ஆம் பக்கம் பார்க்க)

**குறைந்த பக்கங்கள்**

**நேற்று முழுநாள் ஊரடங்கு காரணமாக இன்றைய 'உதயன்' ஆறு பக்கங்களுடன் மட்டும் வெளியாகின்றது.**

## கண்டி, கம்பஹா குறித்து இன்று காலையில் முடிவு

கொழும்பு,டிசெ.7

கண்டி, கம்பஹா மாவட்டங்களில் நடைபெற்ற தேர்தல்களின் வாக்குகளை எண்ணுவதா என்பது குறித்து அரசியல் கட்சித் தலைவர்களுடன் தான் இன்று நடத்தும் சந்திப்பின் போது தேர்தல் ஆணையாளர் முடிவு செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கண்டியில் பத்து வாக்குப் பெட்டிகள் காணாமற்போயுள்ளன என்றும் -

அதேபோன்று கம்பஹா மாவட்டத்திலும் சில முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன என்றும் -

இந்த மாவட்டங்களில் மீள் வாக்குப் பதிவுக்கு உத்தரவிடுவதா அல்லது வாக்குகளை எண்ணுவதா என்பது குறித்து தேர்தல் ஆணையாளர் இன்று கட்சித் தலைவர்களுடன் தான் நடத்தும் கூட்டத்தில் முடிவு செய்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தொகுதி ரீதியாகத் தேர்தல் முடிவுகள்

## மாத்தளை மாவட்டம்

**தம்புள்ள**
★ ஐ.தே.க. - 34,066
★ பொ.ஐ.மு. - 29,281
★ ஜே.வி.பி. - 6,958

**லக்கல**
★ பொ.ஐ.மு. - 20,938
★ ஐ.தே.க. - 16,117
★ ஜே.வி.பி - 2,133
★ புதிய இடதுசாரி மு. - 402

**மாத்தளை**
★ ஐ.தே.க. - 28,478
★ பொ.ஐ.மு - 15,044
★ ஜே.வி.பி - 2,816

## மாத்தறை மாவட்டம்

**மாத்தறை**
★ பொ.ஐ.மு. - 24,480
★ ஐ.தே.க. - 24,376
★ ஜே.வி.பி. - 6,763
★ சிஹல உறுமய - 576

**வெலிகம**
★ பொ.ஐ.மு. - 25,707
★ ஐ.தே.க. - 24,241
★ ஜே.வி.பி. - 3,858

**தெனியாய**
★ ஐ.தே.க. - 26,114
★ பொ.ஐ.மு. - 24,199
★ ஜே.வி.பி. - 6,776
★ ஐ.சோ.மு. - 178
★ புதிய இடதுசாரி மு. - 571

**கம்புறுபிட்டிய**
★ பொ.ஐ.மு. - 23,394
★ ஐ.தே.க. - 21,992
★ ஜே.வி.பி. - 6,479
★ புதிய இடதுசாரி மு. - 384
★ சிஹல உறுமய - 223

**ஹக்மனை**
★ பொ.ஐ.மு. - 24,577
★ ஐ.தே.க. - 23,457
★ ஜே.வி.பி. - 7,094
★ புதிய இடதுசாரி மு. - 511
★ சிஹல உறுமய - 177

**அக்குரஸ்ஸ**
★ பொ.ஐ.மு. - 25,372
★ ஐ.தே.க. - 25,294
★ ஜே.வி.பி. - 9,120
★ சிஹல உறுமய - 185
★ புதிய இடதுசாரி மு. - 437

## மட்டக்களப்பு மாவட்டம்

**பட்டிருப்பு**
★ த.வி.கூ. - 30,725
★ ஐ.தே.க. - 3,967
★ பொ.ஐ.மு. - 2,159
★ ஈ.பி.டி.பி. - 1,165

**கல்குடா**
★ த.வி.கூ. - 20,767
★ ஸ்ரீ.மு.கா. - 18,689
★ சுயேச்சைக் குழு - 4 - 4,714
★ ஐ.தே.க - 3,103
★ ஐ.ம.வி.மு. - 1,040
★ ஈ.பி.டி.பி. - 784

## திகாமடுல்ல மாவட்டம்

**கல்முனை**
★ ஸ்ரீ.மு.காங்கிரஸ் - 22,765
★ த.வி.கூ. - 11,558
★ ஐ.தே.க. - 4,411
★ பொ.ஐ.மு. - 2,700
★ சுயேச்சைக்குழு - 1,052

## அனுராதபுர மாவட்டம்

**ஹொரவப்பொத்தானை**
★ ஐ.தே.க. - 20,699
★ பொ.ஐ.மு. - 18,007
★ ஜே.வி.பி. - 4,454
★ புதிய இடதுசாரி மு. - 402

**மிஹிந்தலை**
★ ஐ.தே.க. - 15,669
★ பொ.ஐ.மு. - 14,429
★ ஜே.வி.பி. - 4,488
★ புதிய இடதுசாரி.மு - 325

**மதவாச்சி**
★ பொ.ஐ.மு. - 20,390
★ ஐ.தே.க. - 19,763
★ ஜே.வி.பி. - 4,647
★ புதிய இடதுசாரி மு. - 543

**அனுராதபுரம் கிழக்கு**
★ ஐ.தே.க. - 23,421
★ பொ.ஐ.மு. - 20,359
★ ஜே.வி.பி. - 7,739
★ புதிய இடதுசாரி மு. - 378
★ சிஹல உறுமய - 202

**அனுராதபுரம் மேற்கு**
★ ஐ.தே.க - 27,308
★ பொ.ஐ.மு. - 20,766
★ ஜே.வி.பி. - 5,003
★ புதிய இடதுசாரி மு. - 466

## பொலன்னறுவை மாவட்டம்

**மின்னேரியா**
★ ஐ.தே.க. - 21,436
★ பொ.ஐ.மு. - 19,423
★ ஜே.வி.பி. - 6,349
★ நவசமாஜக்கட்சி - 435

## பதுளை மாவட்டம்

**மகியங்கனை**
★ ஐ.தே.க. - 30,316
★ பொ.ஐ.மு. - 17,224
★ ஜே.வி.பி. - 4,645

**வியலுவ**
★ ஐ.தே.க - 14,792
★ பொ.ஐ.மு. - 11,941
★ ஜே.வி.பி. - 1,962

## மொனராகல மாவட்டம்

**வெல்லவாய**
★ ஐ.தே.க. - 34,428
★ பொ.ஐ.மு. - 33,230
★ ஜே.வி.பி. - 11,145
★ புதிய இடதுசாரி மு. - 625

**மொனராகல**
★ பொ.ஐ.மு. - 26,591
★ ஐ.தே.க. - 23,313
★ ஜே.வி.பி. - 5,230

**பிபில**
★ ஐ.தே.க. - 20,258
★ பொ.ஐ.மு. - 19,423
★ புதிய இடதுசாரி மு. - 538
★ ஜே.வி.பி. - 483

## இரத்தினபுரி மாவட்டம்

**பலாங்கொடை**
★ ஐ.தே.க. - 30,982
★ பொ.ஐ.மு. - 25,849
★ ஜே.வி.பி. - 4,106

**இரத்தினபுரி**
★ ஐ.தே.க. - 33,702
★ பொ.ஐ.மு. - 33,136
★ ம.வி.மு. - 5,334

**கொலன்ன**
★ ஐ.தே.க. - 33,942
★ பொ.ஐ.மு. - 30,539
★ ஜே.வி.பி. - 13,761

**பெல்மதுல்லை**
★ ஐ.தே.க. - 24,135
★ பொ.ஐ.மு. - 21,329
★ ஜே.வி.பி. - 2,591
★ புதிய இடதுசாரி மு. - 492

**இறக்குவானை**
★ ஐ.தே.க - 30,637
★ பொ.ஐ.மு. - 24,314
★ ஜே.வி.பி. - 3,693
★ புதிய இடதுசாரி.மு - 543
★ ஐ.சோ.க - 167
★ சிஹல உறுமய - 107

## கேகாலை மாவட்டம்

**மாவனல்லை**
★ ஐ.தே.க - 30,845
★ பொ.ஐ.மு. - 17,641
★ ஜே.வி.பி. - 4,116

**றுவான்வெல**
★ ஐ.தே.க. - 21,298
★ பொ.ஐ.மு. - 20,574
★ ஜே.வி.பி. - 3,820

**கேகாலை**
★ பொ.ஐ.மு. - 19,454
★ ஐ.தே.க. - 19,241
★ ஜே.வி.பி. - 5,415

**ரம்புக்கனை**
★ ஐ.தே.க - 19,972
★ பொ.ஐ.மு. - 17,068
★ ஜே.வி.பி. - 3,454
★ சிஹல உறுமய - 232
★ புதிய இடதுசாரி.மு - 203

**கல்கமுவ**
★ ஐ.தே.க - 20,569
★ பொ.ஐ.மு. - 18,619
★ ஜே.வி.பி. - 3,236
★ புதிய இடதுசாரி.மு - 236
★ சிஹல உறுமய - 182

**தெரணியகலை**
★ ஐ.தே.க. - 20,383
★ பொ.ஐ.மு. - 16,528
★ ஜே.வி.பி. - 3,148
★ புதிய இடதுசாரி மு. - 392
★ சிஹல உறுமய - 133

**அரநாயக்க**
★ ஐ.தே.க. - 18,044
★ பொ.ஐ.மு. - 12,163
★ ஜே.வி.பி. - 3,161
★ சிஹ.உறு - 105

## கொழும்பு மாவட்டம்

**பொரளை**
★ ஐ.தே.க - 24,349
★ பொ.ஐ.மு. - 12,710
★ ஜே.வி.பி. - 2,872
★ சிஹல உறுமய - 781

**இரத்மலானை**
★ ஐ.தே.க - 23,432
★ பொ.ஐ.மு. - 17,344
★ ஜே.வி.பி. - 5,750
★ சிஹல உறுமய - 1,014
★ த.வி.கூ. - 571
★ புதிய இடதுசாரி மு. - 180

**மொறட்டுவை**
★ ஐ.தே.க. - 42,150
★ பொ.ஐ.மு. - 33,627
★ ஜே.வி.பி. - 9,932
★ சிஹல உறுமய - 1,161
★ த.வி.கூ. - 450
★ புதிய இடதுசாரி மு. - 255

**கொழும்பு கிழக்கு**
★ ஐ.தே.க. - 26,636
★ பொ.ஐ.மு. - 11,807
★ ஜே.வி.பி. - 3,613
★ த.வி.கூ. - 2,075
★ சிஹல உறுமய - 962

**கோட்டை**
★ ஐ.தே.க. - 27,717
★ பொ.ஐ.மு. - 18,573
★ ஜே.வி.பி. - 5,275
★ சிஹல உறுமய - 1,694
★ ஐ.இ.மு. - 202
★ புதிய இடதுசாரி மு. - 151

**கொழும்பு வடக்கு**
★ ஐ.தே.க. - 41,052
★ பொ.ஐ.மு. - 11,792
★ ஜே.வி.பி. - 3,098
★ த.வி.கூ. - 2,483
★ சிஹல உறுமய - 342

**கடுவெல**
★ ஐ.தே.க. - 43,330
★ பொ.ஐ.மு. - 39,238
★ ஜே.வி.பி. - 16,602
★ சிஹல உறுமய - 1541
★ புதிய இடதுசாரி மு. - 284

## நுவரெலியா மாவட்டம்

**மஸ்கெலியா**
★ ஐ.தே.க. - 1,30,633
★ பொ.ஐ.மு. - 28,734
★ ஜே.வி.பி. - 6,127
★ தே.ஐ.மு. - 4,206

**ஹிங்குரான்கெட்ட**
★ ஐ.தே.க - 25,631
★ பொ.ஐ.மு. - 13,618
★ ஜே.வி.பி. - 2,502
★ புதிய இடதுசாரி.மு - 242

**வலப்பன**
★ ஐ.தே.க. - 26,431
★ பொ.ஐ.மு. - 18,582
★ ஜே.வி.பி. - 2,184
★ புதிய இடதுசாரி மு. - 342
★ ஐ.சோ.க. - 184

## கம்பஹா மாவட்டம்

**களனி**
★ ஐ.தே.க. - 27,174
★ பொ.ஐ.மு. - 23,419
★ ஜே.வி.பி. - 7,589
★ சிஹல உறுமய - 932
★ புதிய இடதுசாரி மு. - 175

**கட்டான**
★ பொ.ஐ.மு. - 39,498
★ ஐ.தே.க. - 35,075
★ ஜே.வி.பி. - 7,388
★ சிஹல உறுமய - 548

**மஹர**
★ பொ.ஐ.மு. - 37,499
★ ஐ.தே.க. - 34,904
★ ஜே.வி.பி. - 11,162
★ சிஹல உறுமய - 231

**நீர்கொழும்பு**
★ ஐ.தே.க. - 35,678
★ பொ.ஐ.மு. - 21,811
★ ஜே.வி.பி. - 4,141
★ சிஹல உறுமய - 265
★ புதிய இடதுசாரி மு. - 262

**வத்தளை**
★ ஐ.தே.க. - 37,592
★ பொ.ஐ.மு. - 24,651
★ ஜே.வி.பி - 6,641
★ சிஹல உறுமய - 513
★ புதிய இடதுசாரி மு. - 220

**அத்தனகல**
★ பொ.ஐ.மு. - 39,531
★ ஐ.தே.க. - 29,618
★ ஜே.வி.பி - 9,351
★ சிஹல உறுமய - 694
★ புதிய இடதுசாரி மு. - 330

**ஜா-எல**
★ ஐ.தே.க. - 38,219
★ பொ.ஐ.மு. - 34,522
★ ஜே.வி.பி. - 9,856
★ சிஹல உறுமய - 708

**பியகம**
★ ஐ.தே.க. - 32,882
★ பொ.ஐ.மு. - 28,778
★ ஜே.வி.பி. - 8,665
★ சிஹல உறுமய - 549
★ புதிய இடதுசாரி மு. - 820

**மீரிகம**
★ ஐ.தே.க. - 33,405
★ பொ.ஐ.மு. - 31,014
★ ஜே.வி.பி. - 10,143
★ சிஹல உறுமய - 462
★ புதிய இடதுசாரி மு. - 284

**கம்பஹா**
★ பொ.ஐ.மு. - 41,519
★ ஐ.தே.க. - 32,479
★ ஜே.வி.பி. - 12,791
★ புதிய இடதுசாரி மு. - 1,090
★ சிஹல உறுமய - 815

## புத்தளம் மாவட்டம்

**சிலாபம்**
★ ஐ.தே.க. - 32,254
★ பொ.ஐ.மு. - 27,821
★ ஜே.வி.பி. - 3,888
★ சிஹல உறுமய - 419
★ புதிய இடதுசாரி மு. - 403

**வென்னப்புவ**
★ ஐ.தே.க. - 28,368
★ பொ.ஐ.மு. - 25,738
★ ஜே.வி.பி. - 4,023
★ சிஹல உறுமய - 532

**ஆனமடுவ**
★ ஐ.தே.க. - 26,507
★ பொ.ஐ.மு. - 25,709
★ ஜே.வி.பி. - 4,254
★ புதிய இடதுசாரி மு. - 507

## களுத்துறை மாவட்டம்

**பேருவளை**
★ ஐ.தே.க - 36,709
★ பொ.ஐ.மு. - 25,641
★ ஜே.வி.பி. - 6,581
★ சிஹல உறுமய - 455
★ ஐ.சோ.க. - 358
★ பு.இ.மு. - 371

**புளத்சிங்கள**
★ ஐ.தே.க. - 24,592
★ பொ.ஐ.மு. - 20,909
★ ஜே.வி.பி. - 3,976
★ ஐ.சோ.க. - 242
★ புதிய இடதுசாரி மு. - 201

(3ஆம் பக்கம் பார்க்க)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 24 - 06 - 1919



விண்ணில் 07 - 11 - 2001

அமரர்
### பிலிப்பு ஞானப்பிரகாசம்
*(தம்பித்துரை - செம்பியன்பற்று)*

இறப்பிலும் வாழ்வான் என்று
திருவாய் பொழிந்த யேசுவே!
இவரின் பாவங்களை மன்னித்து
உமது பேரின்ப வீட்டில் சேர்த்தருளும்.

இவரின் ஆத்மசாந்திக்காக இன்று (07-12-2001) வெள்ளிக் கிழமை காலை 6.30 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால்
துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரன், பூட்டன், உற்றார்,
உறவினர்கள்.

தகவல்:
ஞானப்பிரகாசம் மரியறோஸ்
(மகள்)
மணற்காடு.

(C/19648)



## மரண அறிவித்தல்

### திருமதி பரநிருபசிங்கம் செல்லம்மா

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 27. சீனியர் லேன், யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பரநிருபசிங்கம் செல்லம்மா நேற்று (06.12.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பரநிருபசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கோபாலப்பிள்ளை, தனபாலசிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற துரைசிங்கம், வன்னியசிங்கம் (ஜேர்மனி), தற்பராணந்தம் (ஜேர்மனி), பூலோக இந்திரன் (கனடா), ஜெகசோதி (ஜேர்மனி), கங்காதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், தாமோதரம்பிள்ளை குணரஞ்சினி (ஆசிரியை, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*27, சீனியர் லேன்,*
*தட்டாதெருச் சந்தி அருகில்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பரநிருபசிங்கம் (கணவர்),
குணரஞ்சினி (மருமகள்).

(95674)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

ஓட்டுமடம், செழியன் வீதியில் ஒன்றரைப் பரப்புடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: விளம்பர இல.:- 1412, மே/பா உதயன். (95673)

### இறைச்சிக்கோழிகள் தேவை

இறைச்சிக்கோழிகள் உடன் தேவை. தொடர்புகொள்ளவும். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (95627)

## பதினான்காவது ஆண்டு நினைவு நாள்

மலர்வு 12 - 09 - 1928



உதிர்வு 07 - 12 - 1987

### அமரர் வே.தணிகாசலம் (அதிபர்)

*(யா/ஸ்ரீலங்கா வித்தியாசாலை) (குருமாமணி)*

கல்வியிலே வித்தகர் நீங்கள்
காட்டி நின்றீர் பல வழியை
சொல்லிலே இனியவர் நீங்கள்
விளம்பி நின்றீர் உறுதிமொழியதனை
கண்களிலே காட்டினீர்கள்
காலத்தால் வரும் காட்சிதனை
நெஞ்சத்திலே நிலைத்து நிற்பீர்கள்
என்றும் எம் நினைவுகளில்!

*உங்கள் பாசத்துடன் நினைவு கூரும்*
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*"இராஜஸ்தலம்" அல்வாய்.*
(95641)

## விண்ணக வாழ்வின் ஆண்டொன்றில்

மண்ணில் 18 - 01 - 1926



விண்ணில் 18 - 11 - 2000

### அமரர் பொன்னம்பலம் தர்மலிங்கம்

திதி:07-12-2001

வசந்த காலத்தின் வனப்புகள்
வளமான வாழ்வை அளித்தாலும் ~ உங்கள்
பிரிவின்போது ~ நாம்
தொலைத்துவிட்ட சந்தோஷம்
தொலைதூரம் சென்றதுவோ?
ஆண்டொன்று கடந்திடினும் ~ எங்கள்
வாழ்வும் வளமும் என்றும் ~ உங்களின்
இனிய நினைவுகளோடு.......!

நிமலன் அவன் காலடியில் நிம்மதியாய்
இருக்கப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

- குடும்பத்தினர்.

***39/1(85/3),*** *ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறை. யாழ்ப்பாணம்.* (95662)

உ

## சைவ பரிபாலன சபை
## சைவ இளைஞர் நற்பணி மன்றம்

க.பொ.த. (சா/த) தமிழ், இந்துசமயம்
பரீட்சைக் கருத்தரங்கு

**இடம்:** நாவலர் ஆச்சிரம மண்டபம், நீராவியடி.
**நாள்:** நாளை (08.12.2001) சனிக்கிழமை.

*பங்குகொள்வோரை அன்புடன் அழைக்கின்றோம்.*

- சைவ இளைஞர் நற்பணி மன்றம்.
எல்.ஓங்காரமூர்த்தி,
பரீட்சை செயலாளருக்காக,
சைவ பரிபாலன சபை.

(C/19667)

# தொகுதி ரீதியாகத் தேர்தல்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ சிஹல உறுமய - 115

**மத்துகம**
★ ஐ.தே.க. - 29,290
★ பொ.ஐ.மு. - 25,761
★ ஜே.வி.பி. - 7,697
★ சிஹல உறுமய - 552
★ புதிய இடதுசாரி மு. - 283
★ ஐ.சோ.க. - 271

**பாணந்துறை**
★ ஐ.தே.க. - 32,013
★ பொ.ஐ.மு. - 29,188
★ ஜே.வி.பி. - 9,435
★ சிஹல உறுமய - 1,367
★ புதிய இடதுசாரி மு. - 290
★ ஐ.சோ.க. - 230

**அகலவத்த**
★ ஐ.தே.க - 29,734
★ பொ.ஐ.மு. - 25,147
★ ஜே.வி.பி. - 6,599
★ புதிய இடதுசாரி.மு - 318
★ சிஹல உறுமய - 297
★ ஐ.சோ.க - 292

**ஹொரணை**
★ பொ.ஐ.மு. - 31,788
★ ஐ.தே.க. - 31,462
★ ஜே.வி.பி. - 7,013
★ சிஹல உறுமய - 476
★ புதிய இடதுசாரி.மு - 346
★ ஐ.சோ.க - 215

### அம்பாந்தோட்டை மாவட்டம்

**திஸ்ஸமஹராம**
★ ஐ.தே.க. - 37,939
★ பொ.ஐ.மு. - 32,159
★ ஜே.வி.பி. - 20,179
★ புதிய இடதுசாரி மு. - 671
★ சிஹல உறுமய - 157

**தங்காலை**
★ பொ.ஐ.மு. - 26,745
★ ஐ.தே.க - 25,539
★ ஜே.வி.பி. - 17,744
★ சிஹல உறுமய - 219

**முல்கிரிகல**
★ ஐ.தே.க. - 25,854
★ பொ.ஐ.மு. - 22,625
★ ஜே.வி.பி. - 10,600
★ புதிய இடதுசாரி மு. - 514
★ சிஹல உறுமய - 159

**தங்காலை**
★ பொ.ஐ.மு. - 26,745
★ ஐ.தே.க. - 25,539
★ ஜே.வி.பி. - 17,744
★ சிஹல உறுமய - 219

**பெலியத்த**
★ பொ.ஐ.மு. - 21,272
★ ஐ.தே.க. - 20,457
★ ஜே.வி.பி - 9,385
★ சிஹல உறுமய - 111

### கண்டி மாவட்டம்

**யட்டிநுவர**
★ ஐ.தே.க. - 24,871
★ பொ.ஐ.மு. - 20,318
★ ஜே.வி.பி. - 3,243
★ சிஹல உறுமய - 508
★ புதிய இடதுசாரி மு. - 344

**கம்பளை**
★ ஐ.தே.க. - 25,089
★ பொ.ஐ.மு. - 24,798
★ ஜே.வி.பி. - 2,168
★ புதிய இடதுசாரி மு. - 467
★ சிஹல உறுமய - 228

**உடதும்பர**
★ ஐ.தே.க. - 17,477
★ பொ.ஐ.மு. - 14,110
★ ஜே.வி.பி. - 1,695
★ புதிய இடதுசாரி மு. - 290

**உடுநுவர**
★ ஐ.தே.க. - 28,100
★ பொ.ஐ.மு. - 15,990
★ ஜே.வி.பி. - 2,859
★ புதிய இடதுசாரி மு. - 294
★ சிஹல உறுமய - 292

### காலி மாவட்டம்

**கரந்தெனிய**
★ பொ.ஐ.மு. - 18,925
★ ஐ.தே.க. - 18,632
★ ஜே.வி.பி. - 6,718
★ புதிய இடதுசாரி.மு - 240
★ சிஹல உறுமய - 114

**ஹினிதும**
★ பொ.ஐ.மு. - 30,151
★ ஐ.தே.க. - 29,666
★ ஜே.வி.பி. - 6,217
★ புதிய இடதுசாரி மு. - 353

**அம்பலாங்கொட**
★ பொ.ஐ.மு. - 20,409
★ ஐ.தே.க. - 20,295
★ ஜே.வி.பி. - 5,761
★ சிஹல உறுமய - 228

**ஹபராதுவ**
★ பொ.ஐ.மு. - 23,528
★ ஐ.தே.க. - 21,617
★ ஜே.வி.பி. - 6,882
★ புதிய இடதுசாரி மு. - 239
★ சிஹல உறுமய - 216

**பெந்தர-எல்பிட்டிய**
★ பொ.ஐ.மு. - 26,732
★ ஐ.தே.க. - 25,054
★ ஜே.வி.பி. - 7,296
★ புதிய இடதுசாரி மு. - 290
★ சிஹல உறுமய - 279

**காலி**
★ ஐ.தே.க. - 27,516
★ பொ.ஐ.மு. - 15,640
★ ஜே.வி.பி. - 5,263
★ சிஹல உறுமய - 407

**ரத்கம**
★ பொ.ஐ.மு. - 24,018
★ ஐ.தே.க. - 22,487
★ ஜே.வி.பி. - 5,715
★ சிஹல உறுமய - 274
★ புதிய இடதுசாரி மு. - 214

**பத்தேகம**
★ பொ.ஐ.மு. - 28,326
★ ஐ.தே.க - 27,446
★ ஜே.வி.பி. - 5,714
★ புதிய இடதுசாரி மு. - 350
★ சிஹல உறுமய - 153

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமணப் பொன் ஆண்டு



தியாகர் சண்முகம் மகன் **வரதராசன்** — ஆறுமுகம் மகள் **மகாதேவியம்மா**

**1951**ஆம் ஆண்டு டிசெம்பர் திங்கள் 7ஆம் நாள் தொட்டு இன்று வரை 50 ஆண்டுகளாக, நாம் எமது இல்வாழ்வில் மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் வாழ்ந்து வருவதற்குத் தோன்றாத் துணையாக இருந்துவரும் எமது பெற்றோர்களுக்கும், நல்லறிவு தந்த சான்றோருக்கும் மற்றும் எமது உறவினர்கள், உற்ற நண்பர்கள், பல நாடுகளிலும் பரவி வாழும் எமது அன்பர்கள் அனைவருக்கும் எமது பணிவான வணக்கங்களையும், அன்பையும், நன்றிகளையும் இன்று தெரிவித்து மகிழ்ச்சிகொள்கின்றோம்.

- வரதரும் தேவியும்

84/3, மானிப்பாய்ச் சாலை,
யாழ்ப்பாணம். (C/19656)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 - 03 - 1913



உதிர்வு 18 - 12 - 2000

### அமரர் முருகேசு கனகரட்ணம்

அன்புடனும் பண்புடனும் அரவணைத்து அறிவூட்டி
வளர்த்து அணைந்த அன்பு எனும் தீபமே!
ஆண்டாயிரம் சென்றாலும் நீங்காது உம் நினைவுகள்!!

*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*இல.32, திருமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.* (95609)

## தொகுதி...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ சுயேச்சைக் குழு - 5 - 118
★ ஐ.சோ.கட்சி - 103

### குருநாகல்

**ஹிரியால**

★ ஐ.தே.க. - 26,882
★ பொ.ஐ.மு. - 20,884
★ ஜே.வி.பி. - 4,292
★ புதிய இடதுசாரி மு. - 265
★ சிஹல உறுமய - 262

**நிக்கரவெட்டிய**

★ ஐ.தே.க. - 27,615
★ பொ.ஐ.மு. - 23,120
★ ஜே.வி.பி. - 4,204
★ புதிய இடதுசாரி மு. - 208

**தொடங்கஸ்லந்த**

★ ஐ.தே.க. - 18,703
★ பொ.ஐ.மு. - 17,938
★ ஜே.வி.பி. - 4,147
★ புதிய இடதுசாரி மு. - 203

**கடுகம்பொல**

★ ஐ.தே.க. - 27,964
★ பொ.ஐ.மு. - 26,711
★ ஜே.வி.பி. - 5,140
★ புதிய இடதுசாரி மு. - 221

**குளியாபிட்டிய**

★ ஐ.தே.க. - 30,901
★ பொ.ஐ.மு. - 25,266
★ ஜே.வி.பி. - 4,162
★ புதிய இடதுசாரி மு. - 230

**தம்பதெனிய**

★ ஐ.தே.க. - 29,321
★ பொ.ஐ.மு. - 26,714
★ ஜே.வி.பி. - 5,349
★ புதிய இடதுசாரி மு. - 211
★ சிஹல உறுமய - 207

**பண்டுகஸ்நுவர**

★ ஐ.தே.க. - 23,125
★ பொ.ஐ.மு. - 20,093
★ ஜே.வி.பி. - 2,875
★ புதிய இடதுசாரி மு. - 227
★ சிஹல உறுமய - 107

**பொல்காவலை**

★ ஐ.தே.க. - 24,494
★ பொ.ஐ.மு. - 20,487
★ ஜே.வி.பி. - 3,223
★ சிஹல உறுமய - 340
★ புதிய இடதுசாரி மு. - 174

**குருநாகல்**

★ ஐ.தே.க. - 26,830
★ பொ.ஐ.மு. - 19,359
★ ஜே.வி.பி. - 4,656
★ சிஹல உறுமய - 520
★ புதிய இடதுசாரி மு. - 171

**பிங்கிரிய**

★ ஐ.தே.க. - 28,297
★ பொ.ஐ.மு. - 25,510
★ ஜே.வி.பி. - 2,769
★ புதிய இடதுசாரி மு. - 183

**மாவத்துகம**

★ ஐ.தே.க. - 26,507
★ பொ.ஐ.மு - 20,365
★ ஜே.வி.பி. - 4,134
★ சிஹல உறுமய - 279
★ புதிய இடதுசாரி மு. - 250

**வாரியப்பொல**

★ ஐ.தே.க. - 20,525
★ பொ.ஐ.மு. - 20,009
★ ஜே.வி.பி. - 3,960
★ புதிய இடதுசாரி மு. - 179
★ சிஹல உறுமய - 100

### மஹநுவர மாவட்டம்

**செங்கடகல**

★ ஐ.தே.க. - 25,840
★ பொ.ஐ.மு. - 15,289
★ ஜே.வி.பி. - 3,254
★ புதிய இடதுசாரி மு. - 653

**ஹரிஸ்பத்து**

★ ஐ.தே.க. - 53,249
★ பொ.ஐ.மு. - 28,636
★ ஜே.வி.பி. - 7,496
★ சிஹல உறுமய - 595

### திருகோணமலை மாவட்டம்

**மூதூர்**

★ ஐ.தே.க. - 29,473
★ த.வி.கூ. - 14,393
★ பொ.ஐ.மு. - 11,199
★ ஜே.வி.பி. - 168
★


IIS ற்கு அறிமுகம் தேவையில்லை

என்றாலும், தனது

புதிய புலமைப் பரிசில் திட்டத்தை அறிமுகப்படுத்துவதில்

IIS மகிழ்கிறது !

தமிழ் மண்ணின் தகவல் தொழில்நுட்ப

முன்னோடி தரும் இன்னொரு புதுமை !

# மாபெரும் புலமைப் பரிசில் திட்டம்

**2002ல் இன்னும் விரிவாகிறது !**

**விபரங்கள் இதோ.......**

**எதிர்வரும் கல்வியாண்டு 2002 புலமைப்பரிசில்களுக்கு இருவேறு முறைகளில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட இருக்கிறார்கள்**

| A/L பர்ட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் | எமது போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் |
| --- | --- |
| இம்முறையின் கீழ் மாணவர்கள் தங்களது A/L பரீட்சை (எவ்வருடத்தில் தோற்றியிருப்பினும்) பெறுபேறுகளினைக் கொண்டு விண்ணப்பிக்க முடியும் மாணவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் புலமைப் பரிசில் வழங்கப்படும் | இம்முறையின் பிரகாரம் விண்ணப்பிக்கும் மாணவர்கள் புலமைப் பரிசிலைத் தட்டிக் கொள்வதற்கு IIS னால் நடாத்தப்படும் (நுண்ணறிவு/பொதுஅறிவு) போட்டிப் பரீட்சையில் தோற்றுவதன் மூலம் தெரிவு செய்யப்படுவீர்கள் |

**இப்புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள பயிற்சி நெறிகள்**

1. *Diploma in Internet Technology* *(04 Months)*
2. *Diploma in Micro Soft Office* *(05 Months)*
3. *Diploma in Java Programming* *(05 Months)*
4. *Diploma in Hardware Engineering* *(06 Months)*
5. *Diploma in Computer Programming* *(08 Months)*
6. *Advanced Diploma in Applied Computer Science* *(12 Months)*

இப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகும் காலப்பகுதிகள்

**12th January 2002 05th May 2002 25th August 2002**

A/L 2002 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களிற்கென ஒரு விசேட பிரிவு மே மாதம் உங்களுக்காகவே ஆரம்பிக்கப்படும்

பூரணமாக பூர்த்தி செய்யப்பட்ட இவ் விண்ணப்பப்படிவத்தை அல்லது மேற்படி விடயம் அடங்கலான சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்படிவத்தை நேரடியாக எமது யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை பயிற்சி மையங்களிலோ அல்லது "இயக்குனர், IIS ,100 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்." என்னும் முகவரிக்கு தபால் மூலமாக 31.12.2001க்கு முன் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பி வைக்கவும்

விண்ணப்பத்திற்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது

**முக்கிய குறிப்பு :**

12.01.2002இல் 1வது பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளதால் விண்ணப்ப முடிவு திகதி எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது

**மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் - 2002**

**விண்ணப்பப்படிவம்**

முழுப் பெயர் : ____________________
(விண்ணப்பதாரியின் பெயரின் கீழ் கோடிடுக)

தபால் முகவரி : ____________________

அடையாள அட்டை இல: ____________________

| போட்டிப் பரீட்சையின் ஊடாக விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு மட்டும் | A/L பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு மட்டும் |
| --- | --- |
| போட்டிப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் வலயம்<br>☐ வலிகாமம்<br>☐ வடமராட்சி | சுட்டிலக்கம் : ______<br>ஆண்டு : ______<br>பாடம் / பெறுபேறு |

மேலே என்னால் தரப்பட்ட விபரங்கள் அனைத்தும் உண்மையானது எனவும், இப்புலமைப் பரிசில் தொடர்பாக IIS இன் விதி முறைகளுக்கு உட்பட்டு நடப்பேன் எனவும் இத்தால் உறுதியளிக்கிறேன்

திகதி ______ விண்ணப்பதாரியின் கையொப்பம் ______

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
**No. 100, Clock Tower Road, Jaffna.**
**T.P. No: 021-2831**

"கணனிக் கல்விக்கென தனித்துவம் வாய்ந்த நிறுவனம் IIS"

## உதயன்

### மக்கள் தீர்ப்பு

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும்பாலான மாவட்டங்களின் உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியிடப்படாத போதிலும், முடிவின் போக்கு எப்படி என்பது ஓரளவுக்குத் தெளிவாகிவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாகப் பிரகடனப்படுத்தக்கோரும் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் அமோக வெற்றியீட்டியிருக்கின்றது.

மட்டக்களப்பிலும், வன்னியிலும் இராணுவக் கட்டுப்பாட்டிலில்லாத பிரதேசங்களில் உள்ள தமிழ் மக்கள் இத்தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை.

வாக்காளர் என்ற பெயரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருப்பதாகத் தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது என்ற 'பூச்சாண்டி'யைக் காட்டி இந்த மக்களின் வாக்குரிமையை தட்டிப் பறித்துள்ளது இராணுவம்.

இந்தப் பிரதேச மக்களும் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருப்பின், தமிழர் கூட்டமைப்பின் வெற்றி மேலும் உறுதிப்பட்டிருக்கும் என்பது திண்ணம்.

நேற்றுமுன்தினம் இப்பத்தியில் நாம் குறிப்பிட்டதுபோல -

தமது அடிப்படை உரிமைகளை பெறுவதற்கு ஜனநாயகத் தேர்தல் முறைகளுக்கு அப்பால் ஆயுதப் போராட்டம் போன்ற வழிமுறைகளை நாடிய சக்திகள் கூட, இந்த முறை பொதுத் தேர்தலுக்கு - ஜனநாயக நடைமுறைக்கு - ஓரளவு மதிப்பும் அங்கீகாரமும் கொடுக்கும் நல்லதொரு சூழ்நிலை நிலவுகின்றபோது-

இப்படி மக்களின் வாக்குரிமையைப் 'பூச்சாண்டி' காட்டிப் பறிப்பதும், யாழ்.குடாநாட்டில் தீவகத்திலும் மற்றைய இடங்களிலும் நடந்தது போல பெரிய அளவில் கள்ளவாக்குப் போட்டு மற்றைய கட்சிகளின் ஜனநாயக உரிமைகளைப் பறித்துத் தேர்தல் நடைமுறைகளையே கேலிக்குரியதாக்குவதும் -

ஆயுதப் போராட்ட வழிகளை நாடியோர் தேர்தலின் மீது வைத்த சிறிதளவு நம்பிக்கையைக் கூட சிதறடித்து ஆயுதப் போராட்ட வழியே சிறந்தது என்ற அவர்களது நிலைப்பாட்டை மேலும் உறுதிப்படுத்துவதாகிவிடும் என்பதை இத்தகைய செயல்களுக்குக் காரணமானோர் உணரவேண்டும்.

கடந்த வாரம் தமது மாவீரர் தின உரையில், இலங்கையில் நடக்கும் பொதுத் தேர்தல் -

நாங்கள் விரும்புவது போரையா, சமாதானத்தையா என்பதை மக்கள் தீர்மானிக்க வழங்கப்பட்ட வாய்ப்பு என்று, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அறிவித்திருந்தார்.

போரை விரும்பும் சக்தி எது என்பதையும் சமாதானத்தை நாடும் சக்தி எது என்பதையும் அவர் கோடி காட்டியிருந்தார்.

அதற்கு மேலும் தெளிவான விளக்கத்தை அவரது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் சில தினங்களுக்கு முன்னர், லண்டனில் நடந்த தேசிய எழுச்சிநாள் நிகழ்வில் வெளியிட்டிருந்தார்.

இப்போது தேர்தல் முடிவுகள் வெளியாகிவிட்டன. தமிழர்களும், சிங்களவர்களும் போரையல்ல, சமாதானத்தையே விரும்புகின்றார்கள் என்பதைத் திட்டவட்டமாக வெளிப்படுத்தியிருக்கின்றனர் என்பதையே தேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன.

தீவிரப் போக்குள்ள - சமாதான முயற்சிகளுக்கு எதிராக சந்நதம் கொண்டு ஆடிய - போரார்வம் மிக்க சக்திகளின் பேரார்வத்தை தேர்தல் முடிவுகள் அடக்கி, ஒடுக்கிவிட்டன என்றே கருதவேண்டும்.

இதற்குப் பின்னரும், ஜனாதிபதி குமாரதுங்க தமது போரார்வத்தில் - போர் வெறியில் - விட்டுக்கொடுக்காமல் - அதிலிருந்து கீழிறங்காமல் - பிடிவாதமாக இருப்பாரேயானால், அது இந்த நாட்டு மக்களின் விருப்பத்துக்கு எதிரான அழிவு வழியாகவே இருக்கும் என்ற பாடத்தை அவர் விரைவில் படிக்கவேண்டியிருக்கும்.

# ஊரடங்குவேளையில் நடமாடிய 55பேர் கைதாகித் தடுத்து வைப்பு!

கொழும்பு,டிசெ.7

நாட்டின் பல பகுதிகளிலும் ஊரடங்குச் சட்ட நேரத்தில் நடமாடிய 55 பேர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

கொழும்பு, அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய இடங்களிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் தமது சொந்தத் தேவைகள் நிமிர்த்தம் வெளியே வந்தவர்கள் என்றும் - விசாரணையின் பின்னர் இன்று இவர்கள் விடுதலை செய்யப்படுவர் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டமையினால் சாப்பாட்டிற்காக கொழும்பு நகரில் அலைநது கொண்டு திரிந்த 35 பிச்சைக்காரர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு அன்னதான மண்டபம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று உணவுகளை வழங்கியுள்ளது. இதே வேளை மாத்தறையில் வாகனம் ஒன்றில் பயணம் செய்த ஐந்துபேர் கைது செய்யப்பட்டு, இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடம் ஆயுதம் இருந்ததாக பிரதிப் பொலீஸ்மா அதிபர் இக்னேசியஸ் தெரிவித்தார். இது இவ்வாறிருக்க குருநாகலில் நேற்று அதிகாலை மூன்று கடைகள் எரிக்கப்பட்டதைத் தவிர வேறு பாரிய வன்முறைகள் எதுவும் இடம்பெறவில்லை என தேர்தல் வன்முறை கண் காணிப்புப் பிரதி பொலீஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார். (ஐ)

## நாட்டு நடப்பு

**கடை விரலின் மை**

**திரை மறைவில் நின்று தீட்டிய புள்ளடிகள்**
**விரைவாக அரசு தனை வீழ்த்துமெனில்**
**படை பலத்தை விட பன்மடங்கு பெரியது**
**கடை விரலில் பூசிய மை.**

*- விகடகவி.*

### ஜி.சீ.ஈ. பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும்

கொழும்பு,டிசெ.7

ஜிசீஈ. சாதாரணதரப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ. ஆர்எம்ஜி.அபரக்கோன் அறிவித்துள்ளார். பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் அனைவரையும் இன்று கடமைக்கு வருமாறு அவர் தெரிவித்துள்ளார்.

# புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கத் தயாராகிறோம்!

## வெற்றிக் களிப்பில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.7

அரசியல் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்காக கடந்த ஏழு ஆண்டு காலமாகப் போராடிய எமக்கு தேர்தல் முடிவுகள் பெரும் வெற்றியைத் தந்திருக்கின்றன. புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்க நாம் தயாராகிவிட்டோம்.

- இவ்வாறு உணர்ச்சி பொங்கத் தெரிவித்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

நேற்று கொழும்பில் ஊரடங்கிற்கு மத்தியிலும் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை ரணில் நடத்தினார். அப்போது அவர் கூறியதாவது:-

மக்கள் அமைதி காக்கவேண்டும். அமைதிகாத்து நீதியான சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு சகலரும் ஒத்துழைக்கவேண்டும். அரசியல் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்காக கடந்த ஏழு ஆண்டு காலமாகப் போராடிய எமக்கு, தேர்தல் முடிவுகள் பெரும் வெற்றியைத் தந்திருக்கின்றன. எவ்வாறாயினும் ஆளும் கட்சி எதிர்க்கட்சியாவதும் எதிர்க்கட்சி ஆளும் கட்சியாவதும் உலக அரசியல் நடைமுறை. அது காலகட்ட மாற்றமாகும். மக்களுக்கு சரியான வழியில் சரியானதைச் செய்யத் தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் அரசியல் தலைவர்களுக்கு தோல்வியாகும் என்பதை அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.



உணர்ச்சிகளை ஆவேசமாக வெளிப்படுத்த வேண்டாம். நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பது தொடர்பாக பாதுகாப்பு உயர் அதிகாரிக'ளுடனும் பொலீஸ்மா அதிபருடனும் நான் தொடர்புகொண்டுள்ளேன். ஜனநாயகத்தைப் பாதுகாப்பதே எமது குறிக்கோள் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஐ)

# நேற்று வந்த கப்பல் பயணிகள் ஊரடங்கினால் பெரும் அவதி!

யாழ்ப்பாணம்,டிசெ.7

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் மூலம் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்த நூற்றுக்கணக்கான பயணிகள் நேற்று முழுநாளும் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணமாக வீடுகளுக்குத் திரும்ப முடியாது பெரும் அவதிப்பட்டனர்.

திருமலையில் இருந்து காங்கேசன் துறைக்கு வந்தடைந்த பயணிகள், அங்கிருந்து பஸ் மூலம் யாழ்நகர பஸ் நிலையப் பகுதிக்கு அழைத்து வரப்பட்டு அங்கு இறக்கிவிடப்பட்டனர்.

ஊரடங்கு காரணமாக நகரில் சகல போக்குவரத்துச் சேவைகளும் நேற்று முற்றாகத் தடைப்பட்டிருந்ததால் பயணிகள் நகரில் இருந்து தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

சிலர் நகரில் உள்ள உறவினர், நண்பர்களின் வீடுகளை நாடிச் சென்றனர். ஏனையோர் அங்கு நீண்ட நேரம் காத்துக் கிடந்தனர். பின்னர் பயணிகள் பலர் ஓட்டோ மற்றும் வாடகை வாகனங்கள் மூலம் வீடுகளுக்குத் திரும்ப வசதி செய்யப்பட்டது. படையினரும் பொலீஸாரும் தலையிட்டு இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டனர்.

இதேவேளை -

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் நேற்று இங்கிருந்து பயணிகளை ஏற்றிச்செல்வதாக அறிவிக்கப்பட்ட போதும் ஊரடங்கு காரணமாக பயணிகள் வராததால் நேற்று சேவை நடைபெறவில்லை.

இந்தக் கப்பல் இன்று நண்பகலுக்கு முன்னர் இங்கிருந்து திருமலை செல்ல இருப்பதால் செவ்வாய்க்கிழமை பயணம்செய்ய ரிக்கெட் பெற்ற பயணிகளை இன்று காலை 'றான்' அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறும் - அவ்வாறு வருகைதரும் பயணிகளை ஊரடங்குச்சட்டம் அமுலில் இருப்பினும், கப்பலில் அனுப்பிவைக்க விசேட வசதிகள் செய்யப்படும் என்றும் -

'றான்' அலுவலகம் நேற்றிரவு அறிவித்தது.

இதற்கிடையில் -

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பலில் நேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்ட நோயாளர்களும் அவர்களது உதவியாளர்களும் போக்குவரத்து வசதி இன்றி சிரமப்பட நேர்ந்தது. அவர்கள் பின்னர் யாழ்.ஆஸ்பத்திரியில் தங்கவைக்கப்பட்டனர். அவர்களில் பலரும் நேற்றுப் பகல் ஆஸ்பத்திரியில் இருந்து அம்புலன்ஸ்கள் மூலம் வீடுகளுக்குச் சென்றனர்.

(ஐ-15-139-4)

## நாளை

கார்த்திகை 23
சனிக்கிழமை
திதி : அட்டமி
பிற்பகல் 1.40 வரை.
நட்சத்திரம் : பூரம்
முற்பகல் 11.00 வரை.
சுபநேரம் : 3.17 - 4.47
ராகுகாலம் : 09.17 - 10.47
(பழைய நேரப்படி)

### கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரம், திருகோணமலை - 56 ஆயிரம், மட்டக்களப்பு - 86 ஆயிரம், அம்பாறை - 48 ஆயிரம் என சுமார் 3 லட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிக வாக்குகளை வடக்கு, கிழக்கில் கூட்டமைப்புப் பெற்றுள்ளது. அத்தோடு கொழும்பு மாவட்ட வாக்குகளும் சேர்க்கப்பட கூட்டமைப்புப் பெற்ற மொத்த வாக்குகள், மூன்றரை லட்சத்தைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

### மட்டக்களப்பு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணிக்கு ஓர் ஆசனமும் கிடைத்திருக்கிறது. இதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் மொகைதீன் அப்துல் காதர், பொ.ஐ.மு.வேட்பாளர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா இருவரும் நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்தைச் சேர்ந்த வாக்காளர்களும் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால், தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் மட்டக்களப்பில் மேலும் ஓரிரு ஆசனங்களால் அதிகரித்திருக்க வாய்ப்பு இருந்திருக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

மட்டக்களப்பில் கட்சிகள் பெற்ற வாக்கு எண்ணிக்கையும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் விவரமும் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ த.வி.கூ. | - 86,284 | - 3 |
| ★ ஸ்ரீ.மு.காங்கிரஸ் | -26,725 | - 1 |
| ★ பொ.ஐ.மு. | - 25,705 | - 1 |
| ★ ஐ.தே.கட்சி | - 22,638 | - |
| ★ புளொட் | - 5,601 | - |
| ★ ஈ.பி.டி.பி. | - 4,153 | - |

(ஐ-21-10)

### சோமசுந்தரம் காலமானார்

சென்னை,டிசெ.7

தமிழகத்தின் முன்னாள் அமைச்சரும் திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவருமான எஸ்.டி. சோமசுந்தரம் சென்னையில் நேற்று மாரடைப்பால் காலமானார்.

சிறிதுகாலம் நோய்வாய்ப்பட்டிருந்த இவர் தனது 79ஆவது வயதில் நேற்று அதிகாலை தனியார் மருத்துவமனையில் காலமானார்.

ஆரம்பத்தில் திராவிட இயக்கத்திலும் பின்பு தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய கட்சிகளிலும் உறுப்பினராக இவர் இருந்துள்ளார்.

(ஐ-10)

### தனிப்பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராதபுரம், மதவாச்சி ஆகிய தொகுதிகளில் பொ.ஐ. முன்னணி வெற்றி பெற்றுள்ளது.

இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள முடிவுகளின்படி ஐ.தே.கட்சி 30 லட்சத்து 20ஆயிரம் வாக்குகளைப் பெற்றுள்ளது. பொ.ஐ.முன்னணிக்கு 24 லட்சத்து 64ஆயிரம் மக்கள் வாக்களித்துள்ளனர். ஜே.வி.பி. 5 லட்சத்து 97ஆயிரம் வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்தில் உள்ளது.

சிஹல உறுமய 34ஆயிரத்து 500வாக்குகளும் ஐக்கிய இடதுசாரி முன்னணிக்கு 33ஆயிரம் வாக்குகளும் கிடைத்துள்ளன.

நேற்றுமாலை வரை எண்ணப்பட்ட வாக்குகளில் ஐ.தே.கட்சிக்கு 47.64சதவீத வாக்குகளும் பொ. ஐ. முன்னணிக்கு 38.87சதவீத வாக்குகளும் ஜே.வி.பி.9.41சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளன.

10 மாவட்டங்களின் தேர்தல் பெறுபேறுகள் மாத்திரமே அறிவிக்கப்பட்டுள்ளன. காலி, கேகாலை, கம்பஹா, கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அம்பாறை ஆகிய 9 மாவட்டங்களின் இறுதிப் பெறுபேறுகள் அறிவிக்கப்படவில்லை. (ஐ-4-6-10)

### முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் இஸ்மாயில் ஆகியோரிடையே விருப்பு வாக்குகளில் போட்டி நிலவுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு அம்பாறையில் இரு ஆசனங்கள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. அக்கட்சி சார்பில் திருமதி பேரியல் அஷ்ரப், தேவாரப்பெருமா ஆகியோர் வெற்றியீட்டும் நிலையில் உள்ளனர்.

நேற்றிரவு கிடைத்த உத்தியோகப் பற்றற்ற விவரங்களின்படி அம்பாறையில் கட்சிகளின் நிலைவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ஸ்ரீ.மு.கா. | - 75,257 | - 03 |
| ★ பொ.ஐ.மு. | - 65,246 | -02 |
| ★ ஐ.தே.கட்சி | - 58,468 | -01 |
| ★ த.வி.கூட்டணி | - 48,789 | - 01 |
| ★ சுயேச்சைக் குழு | -14,808 | - |

(ஐ-14)

### வாக்குகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முழுநாள் ஊரடங்கு தொடர்ந்த சமயம் மாலையில் பத்திரிகையாளர்களுடன் தொடர்புகொண்டு இக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவகத்தில் தேர்தல் பணிக்குப் புறப்பட்ட ஐ.தே.கட்சியின் வாக்களிப்பு முகவர்கள், சம்பந்தப்பட்ட வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படாதமை குறித்து அக்கட்சியின் தலைவர், தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்திருந்தார் என்றும் -

அந்த முறைப்பாடு குறித்து இன்று கட்சித் தலைவர்களுடன் தாம் நடத்தும் சந்திப்பில் தேர்தல் ஆணையாளர் முடிவு செய்வார் என்றும் -

அதுவரை யாழ்.மாவட்டத் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதை தாமதிக்க அவர் முடிவு செய்தார் என்றும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோன்று ஏனைய சில மாவட்டங்களிலிருந்தும் கிடைத்த முறைப்பாடுகள் குறித்து முடிவுசெய்யவேண்டியிருப்பதால் -

இன்று கட்சித் தலைவர்களின் சந்திப்பில் அது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்க வசதியாக, வாக்கு எண்ணும் பணியை தேர்தல் ஆணையாளர் இடைநிறுத்தியதாகக் கூறப்படுகிறது.

யாழ்.குடாநாட்டில் தீவகத் தேர்தல் நிலை குறித்துத் தாம் செய்த முறைப்பாட்டை ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று வாபஸ் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதையடுத்து இன்று காலையில் யாழ்.தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-4-6-9-10)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 02 ★ 06 ★ 1927

விண்ணில் 07 ★ 11 ★ 2001

அமரர்

## பொன்னையா பூவிலிங்கம்

இளைப்பாறிய ஆசிரியர்

(கலைத்துறை, யாழ்.பரியோவான் கல்லூரி)

எம் அன்புத் தந்தையே ~ நின்
அன்பு முகம் மறைந்து ஆனதே திங்களொன்று!
ஆறவில்லை எம் சோகம் ஆற்றுவார் யாருமில்லை இங்கு
பாசமுகம் மறையவில்லை ~ நம் பார்வை நின்று!

நாம் புசித்திருக்கவென நீர பசித்திருந்தீரே!
நாம் படித்திருக்க நீர் விழித்திருந்தீரே!
பட்டங்கள் பெற்று பாரினில் நாம் நிமிர
பாதியில் எமை விட்டு பரலோகம் ஏன் சென்றீர்?
அப்பப்பா அம்மப்பா எனும் மழலைக்
குரல்தனை மறந்து போனீரோ?

ஆசையுடன் நின் நேசமுகம் காண
ஏங்குதையா எமதுள்ளம்!
காரிருள் நீக்கும் கதிரவனாய் ~ நீர்
காலமெல்லாம் எமைக் காத்திடுவீர்!

எமது குடும்பத் தலைவரும் எமது அன்புத் தந்தையுமாகிய

### அமரர் பொன்னையா பூவிலிங்கம்

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு நேரில்வந்து எமக்கு ஆறுதல் அளித்தும், மரணச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும் விசேடமாக யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர், குருக்கள், கன்னியாஸ்திரியர்கள், குருமட மாணவர்கள், யாழ்.பரியோவான் கல்லூரி, யா/வேம்படி மகளிர் கல்லூரி, யா/ஆனைப்பந்தி மெ.மிஷன், யா/புனித மரியாள் வித்தியாலய கல்விச் சமூகத்தினருக்கும், யாழ்.பிரதேச செயலருக்கும் உத்தியோகத்தர் களுக்கும், சமுர்த்தி காரியாலய அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கும், யா/பனை அபிவிருத்திச் சபை முகாமையாளருக்கும், உத்தியோகத்தர்களுக் கும், சகலவிதமான உதவிகளையும் முன்நின்று உடனுக்குடன் செய்த அன்பு உள்ளங்களுக்கும், பத்திரிகை, தொலைபேசி, தந்திமூலம் அனு தாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், அயலவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனம்நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித் துக்கொள்ளுகின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் இரங்கல் திருப்பலி இன்று (07.12.2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 (புதிய நேரம்) மணிக்கு யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்
அன்பு மனைவி: மரியமுத்து பூவிலிங்கம்,
மருமக்கள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
பூ.ஜெயவதனி (விஜி)
(மகள்)

*இல.85, தேவாலய வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(95666)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1933 - 04 - 26



உதிர்வு 2001 - 11 - 07

## அமரர் சின்னப்பொடி கதிரன் (V.C.)

(முன்னாள் கிராம சபை உறுப்பினர், கைதடி)

அன்போடும் பண்போடும் அரவணைத்து
ஆதரித்து வளர்த்து அணைந்த
குல விளக்கே!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.*

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*கைதடி மேற்கு,*
*கைதடி.*
(95628)


# ராஜா யாழ்ப்பாணம்

மூன்றாவது வாரமாக
கமல், மனீஷா
*மற்றும் பலர் நடித்த*

## ஆளவந்தான்

தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2,5 (புதிய நேரம்)
(C/19573)

# நாகம்ஸ் சுன்னாகம்

பிரசாந்த், ஷாலினி, மணிவண்ணன
நடித்த

## பிரியாத வரம் வேண்டும்

(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 3.00 (புதிய நேரம்)
(95661)

# நிறைஞ்சனாஸ்

சங்கானை

ரஜனி, பிரபு, கௌதமி
நடித்த

## குருசிஷ்யன்

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C/19574)

# BEACON

வெலிங்டன் சந்தி

## அளவையியல்

துரித மீட்டல் வகுப்பு
*ஆரம்பம் : நாளை (08.12.2001) சனி*
*நேரம் : 8.00 மணி*
(95624)

# வணிகக்கல்வி

## A/L 2002 Paper class

ஆரம்பம்:
நாளை (08.12.2001) Sat. 3 p.m.

## திரு.S.மகேசா

*கடந்த கால வினாக்கள், நடைமுறை விடயம், மாதிரி வினாக்கள் அடங்கிய முழு பாடப் பரப்பிற்குமான துரித மீட்டல்.*

BEACON
யாழ்நகர்.


# மரண அறிவித்தல்கள்

## சோமஸ்கந்த குருக்கள் பரமேஸ்வரி அம்மா

சோமஸ்கந்த குருக்கள் பரமேஸ்வரி அம்மா 05.12.2001 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வராணியின் அன்புத் தாயாரும் புஸ்பராணி, வைத்திலிங்க குருக்கள், இரட்சண சபாபதி ஐயா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.12.2001) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோமஸ்கந்த குருக்கள்.
(C/19670)

## தம்பர் கனகரட்ணம்

(இளைப்பாறிய பிரதம லிகிதரும் செயலாளரும் சுன்னாகம் பல. நோ.கூ.சங்கம்)

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட தம்பு கனகரட்ணம் நேற்று (06.12.2001) வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (07.12.2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க.ஜெயசீலன் (மகன்)
பொது முகாமையாளர்
ப.நோ.கூ.சங்கம்,
அளவெட்டி - மல்லாகம்.

*'தேவி' வாசா*
*தியேட்டர் லேன்,*
*இணுவில் கிழக்கு.*
(C/19669)

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 1938 ★ 12 ★ 30



மறைவு 1999 ★ 12 ★ 07

## திருமதி சர்வேஸ்வரி சிவலிங்கம்

அன்பின் ஒளி விளக்கே!
பாசத்தின் உறைவிடமே!
ஆண்டு இரண்டு புரண்டாலும்
ஆறாதம்மா உங்கள் நினைவு
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*3ஆம் கட்டை ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
(95672)

*பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.


# நாடக ஆற்றுகையாளர்கள் தேவை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் (TRRO) யுனிசெவ் நிறுவனமும் (UNICEF) இணைந்து செயற்படுத்தும் மிதிவெடி விழிப்புணர்வுச் செயற்திட்டம்.

கிராமங்களிலும் பாடசாலைகளிலும் நாடக ஆற்றுகை ஊடான பரப்புரையாக இத்திட்டம் அமையும்.

இதில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்ய விரும்பும் நாடக ஆர்வம், பயிற்சி உடைய இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஒருவருடகாலம் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் 10-12-2001 இற்கு முன்பு சுயவிவரங் களுடன் நேரிலோ கடிதமூலமோ தொடர்புகொள்ளவும்.

*தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:*

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(C/19658)

# தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அனுமதி - 2001

## நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும்

மேற்படி பாடநெறிக்கு க.பொ.த.(சா.த) ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் A/Lஇல் 245இற்கு மேல் புள்ளிகள் பெற்று விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை 10.12.2001 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தே.க.கல்லூரியில் நடைபெறும்.

*நேர்முகப்பரீட்சைக் குழு சார்பாக,*
பா.தனபாலன் (உபபீடாதிபதி - கல்வியும் தரமேம்பாடும்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி. (95664)


# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் சுந்தரலிங்கம்

(தொழில்நுட்பவியலாளர்)

மறவன்புலோ, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சுந்தரலிங்கம் 02.12.2001 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் கந்தப்பு - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் அமரர் சிவேத்தமன் சிவராஜ் (ஹாட்லிக் கல்லூரி மாணவன்), சாந்தினி, அகல்யா (யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் புவனேஸ்வரி, கயிலேஸ்வரி, வள்ளிநாயகி, கனகமணி, செந்தில்நாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுப்பிரமணியம், கந்தசாமி, தர்மராஜா, வைஜெயந்திமாலா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரவெட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வாரியப்பனை,*
*கரவெட்டி மேற்கு.*
(C/19668)

தகவல்:
க.தர்மராஜா

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.